Tamil Nadu Agricultural University
Coimbatore – 641 003

Dr. E. Somasundaram, Ph.D.,
Public Relations Officer &
Professor (Agronomy)

Phone: 0422 - 6611302
Fax: 0422 – 2431821
E-mail: pro@tnau.ac.in

To
The Editor,

Date: 20-3-2013

Sir,

I request that the following matter may kindly be published in your esteemed daily:

## Red Chillies to Fetch Rs.62-65 per Kg

India is the largest producer, consumer and exporter of chilli, which contributes to about 40% of total world production. Next to India, China is the major producer of chilli in the world. In India, chillies are grown in almost all the states. Andhra Pradesh is the largest producer of chilli in India contributing to about 44 % to the total production, followed by Karnataka (12%), West Bengal (8%), Madhya Pradesh (7%), Maharashtra (4%) and Tamil Nadu (2%). According to traders survey, in the current year, the area under chilli has reduced in Tamil Nadu, Andhra Pradesh and Karnataka and the production is likely to fall by 40 per cent comparing last year. Further in Maharastra and Madhya Pradesh also the production has declined. The season in Maharastra and Madhya Pradesh has ended in February.

The export target of chilli from India during 2012-13 was 2.40 lakh tonnes. About 10-15% of total domestic production is meant for exports with domestic consumption of 85-90%. India exports chilli in various processed forms like chilli powder, dried chillies, chilly pickles, chilli paste, flaked chilli, etc., and it is mainly exported to Sri Lanka, USA, Nepal, Mexico, Malaysia, Bangladesh, UAE, Indonesia and China.

During 2011-12, Tamil Nadu produced 30298 tonnes of chillies from 58603 hectares. Tamil Nadu produces 58 per cent of the chillies under rainfed condition. Ramanathapuram (samba), Thoothukudi (mundu), Sivagangai (samba), Virudhunagar (samba), Tirunelveli (samba) and Sankarankovil (samba and mundu) are the major

producers of chillies in the State. In Tamil Nadu, during October-November chillies are raised in nursery or directly sown and harvested during March. Peak arrivals flow during April, May.

Chillies produced in Tamil Nadu will hit markets in Kovilpatti, Sathur, Sankarankoil, Rajapalayam, Kamuthi, Muthukulathur and Virudhunagar markets from second fortnight of March. It is preferable to store dried chilli in cold storage to retain colour. Last year farmers received Rs.40-45 per kg and compared to last year the price of red chillies increased this year.

Farmers are interested to know whether the prices will increase in the coming months or remain stagnant. To help them, the Domestic and Export Market Intelligence Cell functioning in Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore analysed the price of red chillies. The results showed that farmers could get a price of Rs.62-65 per Kg during April –May 2013. Currently the exports orders are very limited. If fresh orders are received for export purpose, then the prices are likely to increase.

Since prices are not likely to increase in the near future, farmers are recommended to sell red chillies without going for storage.

**For further details contact:**

Domestic and Export Market Intelligence Cell,
Centre for Agricultural and Rural Development Studies,
Tamil Nadu Agricultural University,
Coimbatore-641 003
Phone: 0422-2431405

**For Technical Details contact:**

Professor and Head,
Department of Spices & Plantation Crops,
Tamil Nadu Agricultural University,
Coimbatore-641003
Phone: 0422-6611284

Public Relations Officer

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-3-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**மிளகாய் வற்றலின் விலை கிலோவிற்கு ரூ.62-65 வரை இருக்கும்**

*உலகின் மொத்த மிளகாய் உற்பத்தியில் இந்தியா 40 சதவீத பங்களிப்போடு, மிகப்பெரிய உற்பத்தியாளராகவும், நுகர்வோராகவும் மற்றும் ஏற்றுமதியாளராகவும் உள்ளது. இந்தியாவில் மிளகாய் அனைத்து மாநிலங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. மிளகாய் மொத்த உற்பத்தியில் ஆந்திரப்பிரதேசம் 44 சதவீதமும், அதனைத் தொடர்ந்து கர்நாடகா 12 சதவீதமும், மேற்கு வங்காளம் 8 சதவீதமும், மத்திய பிரதேசம் 7 சதவீதமும், மஹாராஷ்டிரா 4 சதவீதமும் மற்றும் தமிழ்நாடு 2 சதவீதமும் பங்களிக்கின்றன. வர்த்தக மூலங்களின் படி கடந்த ஆண்டை ஒப்பிடும் போது இந்தாண்டு தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடகாவில் மிளகாய் பயிரிடும் பரப்பு குறைந்து 40 சதவீத உற்பத்தி குறைந்துள்ளது. மஹாராஷ்டிரா மற்றும் மத்திய பிரதேசத்திலும் உற்பத்தி குறைந்துள்ளது. மஹாராஷ்டிரா மற்றும் மத்திய பிரதேசத்தில் பருவம் பிப்ரவரியுடன் முடிவடைந்தது.*

*2012-13ல் இந்தியாவின் மிளகாய் ஏற்றுமதி இலக்கு 2.40 இலட்சம் டன்களாகும். இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 10-15 சதவீதம் ஏற்றுமதிக்கும், 85-90 சதவீதம் உள்நாட்டு நுகர்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது. மிளகாய்த்தூள், காய்ந்த மிளகாய், மிளகாய் ஊறுகாய், மிளகாய் பேஸ்ட், சீவல் மிளகாய் போன்ற பல வடிவங்களில் இலங்கை, அமெரிக்கா, நேபாளம், மெக்ஸிகோ, மலேசியா, பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இந்தோனேஷியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இந்தியாவில் இருந்து மிளகாய் ஏற்றுமதி செய்யப்படுகிறது.*

*2011-12ம் வருடத்தில் தமிழ்நாட்டில் 30298 டன்கள் மிளகாய் வற்றல் 58603 எக்டர் பரப்பிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் 58 சதவிகிதம் மானாவாரியில் மிளகாய் உற்பத்தி ஆகிறது. ராமநாதபுரம் (சம்பா), தூத்துக்குடி (முண்டு), சிவகங்கை (சம்பா), விருதுநகர் (சம்பா), திருநெல்வேலி (சம்பா) மற்றும் சங்கரன்கோவில் (சம்பா மற்றும் முண்டு) ஆகிய மாவட்டங்களில் மிளகாய் உற்பத்தி அதிகமாக செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் அக்டோபர்-நவம்பர்*

மாதங்களில் நாற்றங்கால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விதைக்கப்பட்டு பிப்ரவரி-மார்ச்சில் மிளகாய் அறுவடை செய்யப்படுகிறது. ஏப்ரல்-மே மாதங்களில் அதிகளவு வரத்து வரும்.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் வற்றல் மிளகாய் கோவில்பட்டி, சாத்தூர், சங்கரன்கோவில், ராஜபாளையம், கமுதி, முதுகுளத்தூர் மற்றும் விருதுநகர் போன்ற சந்தைகளுக்கு மார்ச் மாதம் இரண்டாவது வாரத்தில் இருந்து வரத் துவங்கும். மிளகாய் வற்றலின் நிறம் மாறாமல் இருக்க குளிர்ப்பதன கிடங்குகளில் சேமித்து வைத்தல் விரும்பத்தக்கது. கடந்த ஆண்டு விவசாயிகளுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.40-45 வரை விலை கிடைத்தது. கடந்த ஆண்டை ஒப்பிடும் போது இந்தாண்டு வற்றல் மிளகாய் விலை உயர்ந்துள்ளது.

வரும் மாதங்களில் மிளகாய் விலை அதிகரிக்குமா ? அல்லது இதே விலை நிலவுமா ? என்பதைத் தெரிந்துகொள்ள விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். அவர்களுக்கு உதவும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையத்தில் மிளகாய் வற்றலின் விலை நிலவரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் முடிவில், அறுவடையின் போது அதாவது ஏப்ரல், மே 2013ல் மிளகாய் வற்றலின் விலை கிலோவிற்கு ரூ.62-65 வரை நிலவும் என அறியப்படுகிறது. தற்போது ஏற்றுமதி வாய்ப்பு குறைவாக உள்ளது. ஏற்றுமதி வாய்ப்பு அதிகரித்தால் விலை உயர வாய்ப்பு உள்ளது. ஏப்ரல், மே மாதங்களில் விலை ஏற வாய்ப்புகள் குறைவு. ஆகவே மிளகாய் வற்றலை உடனே விற்பனை செய்யும்படி விவசாயிகள் பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641003
தொலைபேசி: 0422-2431405

<u>மேலும் தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641003
தொலைபேசி: 0422-6611284

மக்கள் தொடர்பு அலுவலர்